எல்லா வினாக்களுக்கும் விடையளியுங்கள். உங்கள் விடைகளை பாடநூலின் துணையுடன் சரி பாருங்கள்.

சுருக்கமான விடை தருக.

1. இஸ்ராயேல் இறைவாக்கினரின் இரண்டு பிரிவினரையும் குறிப்பிடுக. (பக்கம் 2)
2. பெரிய இறைவாக்கினர்களை பெயரிடுக. (பக்கம் 2)
3. இறைவாக்கினர் எலியா எந்த மலையில் பலி ஆயத்தம் செய்தார்? (பக்கம் 6)
4. நாமானின் தொழுநோயை குணப்படுத்தியவர் யார்? (பக்கம் 8)
5. எசாயா என்ற பெயரின் அர்த்தம் யாது? (பக்கம் 9)
6. இறைவாக்கினர் எரேமியாவின் தந்தையின் பெயர் என்ன? (பக்கம் 10)
7. இறைவாக்கினர் எசேக்கியேல் எந்த மக்களுக்கு இறைவனின் செய்தியை வெளிப்படுத்தினார்? (பக்கம் 10)
8. 'சமூக நீதியின்' இறைவாக்கினர் என அழைக்கப்படுபவர் யார்? (பக்கம் 15)
9. நினிவே மக்களை மனம் திருப்பச்சென்ற இறைவாக்கினர் யார்? (பக்கம் 16)
10. ஆபிரகாமின் அழைப்பின் இரு பிரிவுகளையும் குறிப்பிடுக. (பக்கம் 19)

(10 x 3 = 30 புள்ளிகள்)

2. சரியான சொற்களைக் கொண்டு இடைவெளிகளை நிரப்புக.

1. "படைகளின் ஆண்டவர் தூயவர் தூயவர் தூயவர். மண்ணுலகம் முழுவதும் அவரது ..... நிறைந்துள்ளது." (பக்கம் 11)
2. "..... காரணமானவன் நான்தான். எனவே என்னைத்தூக்கி .....எறிந்து விடுங்கள்" (பக்கம் 16)
3. "உன் பெயரை சிறப்புறச் செய்வேன். ...."(பக்கம் 18)
4. "உன் தந்தை ..... கடவுள் நானே. அஞ்சாதே." ஏனெனில் நான் ..... இருக்கிறேன்" (பக்கம் 31)
5. " உன் மூதாதையராகிய .... கடவுள் நானே. நீ படுத்திருக்கும் இந்த நிலத்தை .... தந்தருளுவேன்." (பக்கம் 34)

(5 x 4 =20 புள்ளிகள்)

3 விடை தருக

1. 1) இறைவன் ஆபிரகாமை அழைத்தபோது என்ன கூறி அழைத்தார்? (பக்கம் 18)
   2) ஆபிரகாமுக்கு இறைவன் கொடுத்த 3 வாக்குறுதிகளையும் குறிப்பிடுக. (பக்கம் 21)
   3) ஆபிரகாமின் வாழ்விலிருந்து நீர் பெற்றுக்கொள்ளக்கூடிய படிப்பினைகள் 5 தருக.(பக்கம் 21 - 22) (2+3+5=10 புள்ளிகள்)

2. 1) குல முதுவர்களைப்பெயரிடுக. (பக்கம் 18,28,33)
   2) இறைவன் பெத்தேலில் யாக்கோபுவுடன் செய்த கொண்ட உடன்படிக்கையை எழுதுக. (பக்கம் 37 - 38)
   3) ஈசாக்கின் வாழ்விலிருந்து நீர் பெறும் படிப்பினைகள் 5 எழுதுக. (பக்கம் 32)
   (2+3+5=10 புள்ளிகள்)

3. 1) இறைவாக்கினர் என்பதை விளக்குக. (பக்கம் 5)
   2) இறைவாக்கினர்களை வகைப்படுத்துக. (பக்கம் 2 - 3)
   3) உமது வாழ்வில் நீதிக்காக குரல் கொடுத்த சந்தர்ப்பம் ஒன்றை எழுதி விளக்குக.
   (2+3+5=10 புள்ளிகள்)

4. 1) இறைவாக்குரைப்போரை பெயரிடுக. (பக்கம் 5)
   2)நாமானின் தொழுநோய் குணப்படுத்தப்பட்ட நிகழ்வை குறிப்பிடுக. (பக்கம் 8)
   3)நீர் இறை பராமரிப்பை அனுபவித்த ஒரு சந்தர்ப்பத்தை எழுதுக.
   (2+3+5=10 புள்ளிகள்)

5. 1) சிறிய இறைவாக்கினர் இருவரை பெயரிடுக. (பக்கம் 14)
   2) இவர்களிடம் காணப்பட்ட தலைமைத்துவ பண்புகள் 5 ஐ எழுதுக. (பக்கம் 14 -16)
   3) உமது பாடசாலையில் நீர் தலைமைத்துவத்துடன் செயற்பட்ட சந்தர்ப்பம் ஒன்றை விளக்குக.
   (2+3+5=10 புள்ளிகள்)

www.lkedu.lk